# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 270 of 2004 | **CNR No.** | **:** | TNKI13-000006-2004 |
| **Name** | **:** | தமிழ் | **Father's Name** | **:** | தனபால் |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW1 |
| **Age** | **:** | 33 | **Village** | **:** | சின்னகுன்னத்தூர் |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 03.35 PM | **End Time** | **:** | 03.50 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 21.04.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>1, 3, 5, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) இந்த வழக்கை யார் தாக்கல் செய்தார் என்றால் எனது அப்பா தாக்கல் செய்தார் தற்போது நாங்கள் நடத்தி வருகிறோம். யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது பெரிய தாத்தாவின் வாரிசுகளான துரைசாமி (எ) கோவிந்தன், தருமன், அழகேசன், நடராஜ் மற்றும் அவர்களது வாரிசுகளான வேலாயுதம், சேட்டு, குமார், சக்திவேல், பழனி, கோகுல் (எ) குட்டி, அஸ்வின், நந்தினி ஆகியோர்களுக்கு எதிராக நடத்தி வருகிறோம். இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் கிணற்றில் தண்ணீர் பாத்தியமும், நிலத்திலும் கிணற்றிலும் வழி பாத்தியமும், பைப்லைன் பாத்தியமும், மற்றும் நிலத்தை கேட்டும் தாக்கல் செய்துள்ளோம். இறந்த தனபாலுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 நபர்கள் ஆகும், எனது அம்மா மங்கை, எனது அண்ணன் மாது, சுரேஷ் மற்றும் நான். தனபாலுக்கு தருமனும் நடராஜும் என்ன உறவு முறை

என்றால் தனபாலுடைய பெரியப்பா மகன்கள் ஆவர்கள். 6 முதல் 11 பிரதிவாதிகள் இறந்த 2 மற்றும் 4–ம் பிரதிவாதிகளின் வாரிசுகள் என்றால் சரிதான்.

(2) எனக்கு என்ன வயது என்றால் 33 ஆகும். எனது முதல் விசாரணை பிரமாண பத்திரத்தை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். எனது பிரமாண பத்திரத்தில் எனது வயது 31 என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன். இந்த வழக்கை எப்போது தாக்கல் செய்தார்கள் என்றால் எனது அப்பா 2004–ல் தாக்கல் செய்தார். எனக்கு இந்த வழக்கை எனது அப்பா தாக்கல் செய்யும் போது என்ன வயது என்றால் 12 வயது ஆகும். வழக்கு தாக்கல் செய்யும் போது நான் இளவர் என்பதால் எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல, நான் எனது அப்பா உடன் சென்று வருவேன், அதனால் சொத்து பிரச்சனை விவரங்களும் வழக்கு விவரங்களும் எனக்கு நன்றாகத் தெரியும்.

(3) **குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

AMAR ANAND

District Munsif
Digitally signed by AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai